இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, 'அமைதி மற்றும் நம்பிக்கையின் விதைகள்' என்ற கருப்பொருளைக் கொண்ட, இவ்வாண்டின், படைப்பின் பாதுகாப்பிற்கான இறைவேண்டலின் நாளுக்கென திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.**

# அமைதி மற்றும் நம்பிக்கையின் விதைகளாக மாறுவோம்

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட, 'அமைதி மற்றும் நம்பிக்கையின் விதைகள்' என்ற கருப்பொருளைக் கொண்ட, இவ்வாண்டின், படைப்பின் பாதுகாப்பிற்கான இறைவேண்டலின் நாளுக்கென திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள் செய்தி ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஆண்டவர் இயேசு இறையரசை அறிவித்த போது மிக அதிகமாக விதை பற்றிய உருவகங்களை பயன்படுத்தினார் என்றும், தன்னுடைய பாடுகள் நெருங்கும் காலத்திலும் தன்னையே கோதுமை விதையுடன் ஒப்பிட்டு மடிந்து பலன் தர வேண்டும் என்று கூறியதையும் திருத்தந்தை தனது செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், சட்ட மீறல்கள், உரிமை மீறல்கள் மற்றும் அவற்றைத் தூண்டும் பசிக்கொடுமை போன்றவைகளால் பசுமைநிலங்கள் அழிக்கப்படுகின்றன என்றும், மாசுபாடு, உயிரின வகைகள் அழிவதெல்லாம் தீவிரமடைந்து வருகின்றன என்றும் தனது செய்தியில் கவலை தெரிவித்துள்ள திருத்தந்தை 14ஆம் லியோ அவர்கள், போர்கள் மற்றும் காலநிலை மாற்றங்களால் அதிகரித்துவரும் இயற்கை சீரழிவுகள் குறித்தும் தெரிவித்துள்ளார்.

இயற்கை சில நேரங்களில் பொருளாதார அல்லது அரசியல் இலாபத்திற்காக சந்தைப்படுத்தப்படுகிறது என்றும், இதனால் கடவுளின் படைப்பே ஒரு யுத்த களமாக மாறி வருகிறது என்றும் தனது செய்தியில் திருத்தந்தை வருத்தம் தெரிவித்துள்ளார்.

ஆண்டவர் இயேசுவால் படைக்கப்பட்டதும், மீட்கப்பட்டதுமான இந்த உலகை பாதுகாப்பது நம்பிக்கையாளர் ஒவ்வொருவரின் கடமை என்றும், இயற்கை அழிவுகளாலும், மாசுபடுதலினாலும் பாதிக்கப்படுகின்ற சகோதர சகோதரிகளின் மீது அக்கறை கொண்டு படைப்பை பாதுகாப்பது நமது நம்பிக்கையும் மனிதநேயமும் ஆகும் என்றும் தெரிவித்துள்ளார் திருத்தந்தை.


படைப்பை பாதுகாப்பது நம் கடமை (AFP or licensors)

மேலும், இயற்கையை பாதுகாக்கும் விதமாக திருஅவையின் ஒரு விதையாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் காஸ்தெல் கண்டோல்ஃபோவில் தொடங்கப்பட்ட Borgo Laudato Si' திட்டத்தையும் தனது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார் திருத்தந்தை 14ஆம் லியோ.

ஜெர்சிலின் டிக்ரோஸ் - வத்திக்கான்

# ஆயர் மன்றங்களின் சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான அழைப்பு


வறட்சியின் காட்சி (ANSA)

இவ்வாண்டு நவம்பர் 10 முதல் 21- ஆம் தேதி வரை பிரேசிலின் பெலெமில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் சபையின் COP30 காலநிலை மாற்ற மாநாட்டில் "வானிலை நீதி மற்றும் பொதுவுடமைக்கான அழைப்பு, பசுமை மாற்றம், மாற்றத்திற்கான மற்றும் போலியான தீர்வுகளுக்கு எதிர்ப்பு" என்ற தலைப்பில் ஒரு கூட்டு ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது. ஜூலை 1-ஆம் தேதி திருப்பீட பத்திரிகை அலுவலகத்தில் நடந்த செய்தியாளர் சந்திப்பின் போது திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களுக்கு இந்த ஆவணம் வழங்கப்பட்டுள்ளது என்றும், இது காலநிலை நீதிக்கான திருஅவையின் உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்துவதோடு, ஒருங்கிணைந்த சூழலை ஊக்குவிப்பதற்காக அனைத்து நாடுகளையும் அரசுகளையும் நடவடிக்கை எடுக்க அழைப்பதாகவும் குறிப்பிடுகிறது திருப்பீடம்.

கோடிக்கணக்கான மக்கள் ஏற்கனவே காலநிலை மாற்றத்தின் பேரழிவுகளை அனுபவித்து வருகின்றனர் என்றும், புயல்கள், கட்டாய இடம்பெயர்வு, தீவுகள் இழப்பு, ஆறுகள் மாசுபடுதல் ஆகியவை மேலும் இந்த கிரகத்தை ஒரு நுகர்வுப் பொருளாகக் கருதி விழுங்க முயலும் முறைமையை எதிர்கொண்டு, மனச்சாட்சிக்கு அழைப்புவிடுவதாக இந்தியாவின் கோவா மற்றும் டாமன் மறைமாவட்ட பேராயரும், ஆசிய ஆயர்கள் மாமன்றத்தின் (FABC) தலைவருமான கர்தினால் ஃபிலிப் நேரி ஃபெராவோ கூறியதும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பிரேசிலின் போர்ட்டோ அலெக்ரே மறைமாவட்ட ஆயரும், பிரேசிலிய ஆயர்கள் பேரவை (CNBB) மற்றும் இலத்தீன் அமெரிக்கா மற்றும் கராபிய மறைமாவட்டக் குழுவின் (CELAM) தலைவருமான கர்தினால் ஜெய்மி ஸ்பென்க்லர், காங்கோ ஜனநாயகக் குடியரசின் கின்ஷாசா மறைமாவட்ட ஆயரும், ஆப்பிரிக்கா மற்றும் மடகாஸ்கர் ஆயர் பேரவையின் (SECAM) தலைவருமான கர்தினால் ஃபிரிடோலின் அம்பொங்கோ பெஸுங்கு, திருத்தந்தையின் இலத்தீன் அமெரிக்க ஆணைக்குழுவின் செயலரான எம்லிஸ் குடா ஆகியோரும் செய்தியாளர்கள் சந்திப்பின் போது உடனிருந்தனர்.

அமேசானிலிருந்து ஆப்பிரிக்கா வரை, திருஅவை அதன் குரலை எழுப்புகிறது எனவும், நிலத்திற்காக மறைசாட்சிகளான அமேசானிய மக்களின் சார்பாக குரலை எழுப்புகிறேன் எனவும், பழங்குடி, ஆப்பிரிக்க-வம்சாவளி, விவசாயிகள் மற்றும் நகர்ப்புற சமூகங்களின் வாழ்க்கை முறை, உற்பத்தி மற்றும் நுகர்வு ஆகியவற்றில் மாற்றங்களின் தேவை எனவும் கர்தினால் ஸ்பெங்லர் இச்சந்திப்பின்போது எடுத்துரைத்தார்.

அதேவேளை, கர்தினால் அம்போங்கோ அவர்கள், ஆப்பிரிக்க கண்டத்தின் தலத்திருஅவைகளின் சார்பாக தனது நிலைப்பாட்டை எடுத்துரைத்தபோது, அனைத்து மனிதகுலத்திற்கும் நீதி மற்றும் அமைதியின் எதிர்காலத்திற்கு ஆப்பிரிக்கா பங்களிக்க விரும்புகிறது என்றும், காலநிலை மாற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களைக் கலந்தாலோசிக்காமல் எடுக்கப்பட்ட முடிவுகள் ஏற்றுக்கொள்ள முடியாதவை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சுஜிதா சுடர்விழி - வத்திக்கான்


இலங்கை குழந்தைகள் (ANSA)

# இலங்கையில் குழந்தைகளின் நலன் காக்கும் தடைகள் அமல்

இலங்கையில் ஜூலை 1ஆம் தேதி முதல் 16 வயதுக்குட்பட்ட குழந்தைகள் பிச்சை எடுப்பது, தெருக்களில் வியாபாரம் செய்வது மற்றும் வீட்டு வேலை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது எனவும், அதே நேரத்தில் 16 முதல் 18 வயதுக்குட்பட்டவர்களுக்கு ஆபத்தான வேலைகள் செய்ய தடைசெய்யப்பட்டுள்ளன எனவும் ஆசியா செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

வாராந்திர அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய அமைச்சர் ஜெயதிஸ்ஸ, ஐக்கிய நாடுகளின் குழந்தைகள் உரிமைகள் மாநாட்டின்படி, 18 வயதுக்குட்பட்ட ஒவ்வொரு நபரும் சட்டப்பூர்வமாக அவர்கள் ஒரு குழந்தைதான் என வலியுறுத்தியதாகவும், மேலும் இலங்கை மக்கள் தொகையில் 30 விழுக்காட்டினர் குழந்தைகள் எனவும் குறிப்பிட்டார்.

ஐ.நா.வின் குழந்தை உரிமைகள் குறித்த இலக்கை அடைய தற்போதுள்ள சட்டங்களை கண்டிப்பாக அமல்படுத்துவோம் என்றும், புதிய விதிகள் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒரு பெரிய விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்குவோம் என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையில், இலங்கையில் குழந்தைகள் தொழிலாளர்களாக மாற, குடும்ப வறுமை காரணம் என்று கூறும் அரசு, குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் பெரும்பாலும் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய தங்கள் குழந்தைகளின் கூடுதல் வருவாயை நம்பியுள்ளதாகவும், குடும்ப சுழல்களினால் ஆண்களும் பெண்களும் வேலை செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்படுகின்றனர் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், தரமற்ற கல்வி, பெற்றோரை இழப்பது, பெற்றோரின் இடம்பெயர்வு மற்றும் உணர்வுபூர்வமான துயரங்கள் ஆகியவையும் குழந்தைகள் முன்கூட்டியே பணியிடத்தில் நுழைய வழிவகுப்பதாகவும், இந்த சூழ்நிலைகள் பெரும்பாலும் சிறுவர் மற்றும் சிறுமிகளை போதுமான ஆதரவு இல்லாமல் பெரும் பாதிப்புகளுக்கு ஆளாக்குகின்றன என்றும் குறிப்பிட்டுள்ளது ஆசியா செய்தி நிறுவனம்.

மேலும், வறுமையின் காரணமாக இலங்கையில் 10,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் காப்பகங்களில் வாழ்கின்றனர் எனவும், இங்கு குழந்தைகளுக்கு ஏற்ற சூழல்கள் இல்லை எனவும், மேலும் குழந்தைகள் வேலை செய்யும் இடத்தில் மறைமுகத் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடும் என்றும் எடுத்துரைத்துள்ளது அச்செய்தி நிறுவனம்.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கான விதிமுறைகளை அரசு ஏற்கனவே ஏற்றுக்கொண்டுள்ளதாகவும், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் நலனைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்தப்பட்டாலும், நாட்டில் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் சவால்கள் உள்ளதாகவும் தெரிவித்துள்ளது அச்செய்தி நிறுவனம்.

சுஜிதா சுடர்விழி - வத்திக்கான்

# கூலிம் திரு இருதய ஆண்டவர் பங்கில் உறுதிப்புசுதல் முகாம்





கடந்த ஜூன் 7-ஆம் நாள், கூலிம் திரு இருதய ஆண்டவர் பங்கில் ஆங்கில மறைக்கல்வி மாணவர்களுக்காக ஒரு நாள் முகாம் காலை மணி 8.30 முதல் மாலை மணி 4.30 வரையிலும் நடைபெற்றது.

அதில் 5 மாணவர்கள் பங்கேற்ற வேளையில், அவர்களின் பெற்றோர்களுக்கான உரையாடலும் இடம்பெற்றது. சிறப்பு பேச்சாளராக திருத்தொண்டர் லாசரஸ் வழிநடத்த, மூத்த மறைக்கல்வி ஆசிரியர் சிரியல் டேல்போத், சகோதரர் மரிய செல்லம், சகோதரர் நிக்லஸ், ஆங்கில மறைக்கல்வி ஆசிரியர்கள் பிரிஷிலா,மேதலீன் நிக்கல்ஸ்,டேரியல், ஆங்கில மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர் ஜோயல் ஆகியோர் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

தமிழ் மறைக்கல்வி மாணவர்களுக்கான பயிற்சி முகாம் கடந்த ஜூன் 20-ஆம் நாள் காலை மணி 10.30க்கு தொடங்கி மறுநாள் மாலை மணி 6-க்கு திருப்பலியுடன் முடிவடைந்தது. இப்பயிற்சியில் 8 மாணவர்கள் பங்கேற்றனர்.

செப ஆராதனை, தியானம் மாணவர்களின் மனமாற்றத்திற்கு சிறந்த மருந்தாக அமைந்திருந்தன. சிறப்பு பேச்சாளர்களாக சகோதரர் தோஸ், பங்கு ஒருங்கிணைப்பாளர் சகோதரி விமலா, சகோ.கேத்தரின், சகோ.ஜேன், சகோதரர் ஜென்சன், சேனான், மற்றும் இசைக்கருவிகள் வாசித்த பங்கின் தமிழ் இளைஞர்கள், இறுதி வரையில் இருந்து ஒத்துழைப்பு நல்கிய மறைக்கல்வி ஆசிரியர்கள் ஜெசிக்கா,நென்சி தெரிலீனா, ஜெஸ்மின்,தமிழ்



மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர் மேதலீன் டேனல் மும் மொழி மறைக்கல்வி ஒருங்கிணைப்பாளர் சகோதரி ச. ஜேன், பெற்றோர்கள் மற்றும் எல்லா விதத்திலும் உதவிய பங்கு தந்தை ஹென்றி ராஜூ அவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

# கூலாய் கிறிஸ்து அரசர் தேவாலயத் தமிழ் இளைஞர் குழுவின் விவிலிய புதிர் போட்டி - பாகம் 4



கடந்த ஜூன் 14ஆம் நாளன்று, கூலாய் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் தமிழ் இளைஞர் குழு, "முதுபெரும் தந்தையர்கள் - பகுதி 2" என்ற கருப்பொருளில் விவிலிய புதிர் போட்டியின் நான்காம் பாகத்தை மிகச் சிறப்பாகவும் ஆன்மீக செழுமையுடனும் நடத்தியது. இத்திருவருட் செயலை அருள்தந்தை ஜேம்ஸ் ராஜேந்திரன் (JR) அவர்களின் ஒப்புதலுடனும், ஆண்டவரின் ஆசீர்வாதத்துடனும், 'போர்ட்டா ஃபைடே'-யில் காலை 9:00 மணி முதல் பிற்பகல் 1:00 மணி வரை நடைபெற்றது. இந்நிகழ்வில் 28 இளைஞர்களும் தலைவர்களும் மிகுந்த உற்சாகத்துடன் பங்கேற்றனர். குழுச் செயல்பாடுகள், விவிலிய பிரதிபலிப்புகள் ஆகியவற்றின் மூலம், பங்கேற்பாளர்கள் ஆழமான தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டதோடு தங்கள் தோழமையின் பிணைப்பையையும் வலுப்படுத்தினர்.

புதிர் போட்டியின் ஒரு சிறப்பம்சமாக, சகோதரர் எட்வின் தொடக்கநூலின் 25 ஆம் அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு, ஈசாக்கு, யாக்கோபு தொடர்பான விவிலிய கதையைப் பற்றிய நன்கு கட்டமைக்கப்பட்ட கதை அடிப்படையிலான விளக்கத்தை அளித்தார். இதைத் தொடர்ந்து,



குழு விளையாட்டுகளும், புதிர் போட்டியின் தொடர்ச்சியும் நிகழ்வின் சூழ்நிலையை உற்சாகமாகவும் ஈடுபாட்டுடனும் வைத்திருந்தன. பங்கேற்பாளர்களின் தீவிர ஈடுபாடு ஒன்றுகூடலுக்கு மகிழ்ச்சியைச் சேர்த்தது. தொடக்கநூல் 25-லிருந்து, ஏசா தனது தலைமகனுரிமையை ஒரு கிண்ணக் கூழுக்காக யாக்கோபுக்கு எப்படி விட்டுக்கொடுத்தார் என்பதை நாம் கற்றுக்கொள்கிறோம். இது போன்ற அவசரமான முடிவுகள் பெரும் இழப்புக்கு வழிவகுக்கும் என்பதைக் காட்டுகிறது. இந்த கதை நமது ஆன்மீக ஆசீர்வாதங்களை மதிப்பிடவும், தற்காலிக திருப்திக்காக அவற்றை இழக்காமல் இருக்கவும் நமக்கு நினைவூட்டுகிறது.






இந்த விவிலிய புதிர் போட்டி இளைஞர்களுக்கு ஒரு ஊக்குவிப்புத் தூணாகச் செயல்பட்டது, இத்தகைய அர்த்தமுள்ள ஆன்மீக நிகழ்வுகளைத் தொடர்ந்து ஏற்பாடு செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தது. அந்த நாள் அனைவருக்கும் மறக்க முடியாத, மேலும் ஆன்மீக ரீதியாக மேம்படுத்தும் அனுபவமாக மாறியது. அனைவரும் புதுப்பிக்கப்பட்ட, புத்துணர்ச்சியூட்டப்பட்டவர்களாக வீடு திரும்பினர்.

# நல்ல சமாரியர்: நீயா நானா இயேசுவா?

அடுத்தவர் மீது அக்கறை, இரக்கம் காட்ட வேண்டும் என்பது மனிதநேயம். இதுவே இன்றைய நற்செய்தியின் பாடம். இன்றைய லூக்கா நற்செய்தியில் இடம் பெற்றிருக்கும் முதல் பகுதி இதர இரண்டு ஒத்தமை நற்செய்திகளிலும் (மத்தேயு,மாற்கு) இடம் பெற்றிருக்கின்றன. ஆனால் புனித லூக்கா மட்டுமே முதல் பகுதியை விளக்குவதற்கு 'நல்ல சமாரியர்' உவமையைத் தந்துள்ளார்.

திருச்சட்ட அறிஞர் ஒருவர் எழுந்து இயேசுவைச் சோதிக்கும் நோக்குடன், "போதகரே, நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். கேள்விக்கு கேள்வியாலே பதில் கொடுக்கிறார் இயேசு. 'உன் முழு இதயத்தோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆற்றலோடும், முழு மனதோடும் உன் கடவுளாகிய ஆண்டவரிடம் அன்பு கூர்வாயாக. உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்பு கூர்வாயாக' என்று எழுதியுள்ளது" என அந்த அறிஞர் கூறுகிறார். அதுவே கேள்விக்குப் பதில் என இயேசு கூறுகிறார். ஆனால் அவருக்கு 'அடுத்திருப்பவர்' யார் என்று தெரியாத காரணத்தால், நல்ல சமாரியர் கதையை இயேசு சொல்கிறார். இதில் வரும் கதாபாத்திரங்கள் நால்வர். கள்வர் கையில் சிக்கிக் குற்றுயிராக விடப்பட்டவரோடு மற்ற மூவர் அவ்வழியில் வந்த குரு, லேவியர், சமாரியர் ஆவர். குற்றுயிராக விடப்பட்டவர் யூதர் எனக் கூறப்படுகிறது. பலத்தக் காயத்துடன் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கும் அந்த யூதரைக் கண்டும் காணாமல் போகிறவர்கள் குருவும் லேவியரும் ஆவர். ஆனால் சமாரியர், அவரைக் கண்டு பரிவு காட்டி, காயங்களில் திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்து, ஒரு சாவடிக்குக் கொண்டுபோய் அவரைக் கவனித்துக் கொண்டார். "கள்வர் கையில் அகப்பட்டவருக்கு இம்மூவருள் எவர் அடுத்திருப்பவர் என உமக்குத் தோன்றுகிறது?" என அந்தத் திருச்சட்ட அறிஞரை இயேசு கேட்கிறார். அவருக்கு இரக்கம் காட்டியவரே, என அவரும் பதில் தருகிறார். "நீரும் போய் அப்படியே செய்யும்" என இயேசு கூறுகிறார். நீங்களும் நானும் நல்ல சமாரியரைப் போல் பரிவிரக்கத்தோடு வாழ்ந்தால் நிலைவாழ்வை உரிமையாக்கிக் கொள்ள முடியும் என்பது இக்கதையின் சுருக்கம்.

இன்றைய நமது சூழ்நிலையில், கள்வர் கையில் அகப்பட்டவர் யார்? பல்வேறு பாவத்தின் கோரப் பிடியில் சிக்கி சின்னா பின்னமாகி இருப்பவர் யார்? பாவத்தின் பாதாளத்தில் விழுந்து குற்றுயிரும் குலையுருமாக கிடப்பவர் யார்? உங்கள் மனதைத் தொட்டுச் சொல்லுங்கள். நீங்களும் நானுமல்லவா! அதிலிருந்து கைத்தூக்கி விடுதலை அளிக்க வந்த நல்ல சமாரியர் யார்? 'கட்புலனாகாத கடவுளது சாயலாக' (கொலோ.1:15) வந்த இயேசு எனப் புனித பவுல் இரண்டாம் வாசகத்தில் கூறுகிறார்.

பாவச் சேற்றில் அமிழ்வதிலிருக்கும் என்னைக் காத்தருளும். உமது முகத்தை அடியேனுக்கு மறைக்காதேயும் என இன்றையத் திருப்பாடல் (திபா.69:14,17) கூறுவது போல், நமது பாவக் காயங்களுக்கு திராட்சை மதுவும் எண்ணெயும் வார்த்துத் தேற்றி, தமது வாகனமான சிலுவையில் ஏற்றி, சாவடிக்கு (விண்ணகம்) கொண்டு செல்லும் நல்ல சமாரியர், இயேசுதான். யூதர்களால் ஏளனம் செய்து, புறந்தள்ளி ஒதுக்கப்பட்ட சமாரியரே, காயப்பட்ட யூதருக்குக் கைக் கொடுத்தார். கசையடிகளால் தசைகள் கிழிக்கப்பட்டு, முள்முடியினால் முகத்தை அலங்கோலமாக்கி, ஈட்டியால் உடம்பெல்லாம் இரத்தக்களமாக்கி, நகருக்கு வெளியே சிலுவையில் அறையப்பட்டு, புறந்தள்ளப்பட்ட இயேசுவே, தமது பேரன்பினாலும் பேரிரக்கத்தாலும் நம்மை மீட்டுள்ளார் என்பதை மறந்து விட வேண்டாம் என முதல் வாசகம் நினைவுறுத்துகிறது. அவரது கட்டளைகளையும் நியமங்களையும் கடைப்பிடித்தால், ஆண்டவர் நம்மோடு இருப்பார் என்றும் அவ்வாசகம் (இச.30:10-14) நம்பிக்கை அளிக்கிறது.

நல்லாயனாக நம்மை வழிநடத்தும் ஆண்டவர், நல்ல சமாரியராக நம்மை பராமரித்து வருகிறார். அடுத்தவருக்கு நாமும் நல்ல சமாரியராக இருப்போம்!

அந்தோணி இன்னாசி
சைபர்ஜெயா